**செப்டம்பர் – 19**

# TNPSC துளிகள்

- இந்திய திறன் மேம்பாட்டு அமைச்சகமானது ஜெர்மனியின் தொழில் முனைவோர் (MSDE) மற்றும் இந்தோ ஜெர்மன் சேம்பர் ஆப் காமர்ஸ் (IGCC) என்ற அமைப்புடன் இணைந்து இந்திய இளைஞர்களுக்கு இரட்டை தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சியை வழங்கும் திறன் மேம்பாட்டிற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- கடல் சார் ஒத்துழைப்பு, சுற்றுலா மற்றும் பயிற்சித் துறைகளில் இந்தியா மற்றும் மால்டா ஆகிய நாடுகள் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

# தமிழ்நாடு செய்திகள்

## TN-ஸ்மார்ட் செயலி

- தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமானது (TNSDMA) நிகழ் நேர பேரிடர் மதிப்பீட்டிற்காக 'TN-ஸ்மார்ட்' என்ற செயலியை அறிமுகப்படுத்த இருக்கின்றது.
- இது பேரிடர் மேலாண்மை தொடர்பான தரவுகளை இணைத்து குறிப்பிட்ட பகுதிகளில் வெள்ள எச்சரிக்கைகளை வழங்கும் ஒரு வலைதள செயலி ஆகும்.
- தமிழ்நாட்டின் - பல்வகை அபாய பாதிப்பு தாக்க மதிப்பீடு மற்றும் அவசரகால செயல்பாட்டு கண்காணிப்பு (Tamil Nadu - System for Multi-hazard potential impact Assessment and Emergency Response Tracking) என்பதன் சுருக்கமே TN-ஸ்மார்ட் ஆகும்.

## தொழில்நுட்ப உதவியுடன் முதல் கால்நடைகள் கணக்கெடுப்பு

- தமிழ்நாடானது தொழில்நுட்ப உதவியுடன் நடத்தப்படும் தனது முதல் கால்நடை கணக்கெடுப்பான 20 வது கால்நடைகள் கணக்கெடுப்பை நடத்தவுள்ளது.
- இந்த கால்நடை கணக்கெடுப்பானது வரைப்பட்டிகையின் (Tablet) உதவியோடு, பல்வேறு இடங்களில் கால்நடைகளின் புகைப்படங்களை எடுத்து கணக்கிடப்படும்.
- இது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும். மேலும் மூன்று மாத காலத்திற்கு (வழக்கமாக 1 மாதம்) கணக்கெடுப்பு நடத்தப்படுவது இதுவே முதன் முறையாகும்.
- 2002 லிருந்து கால்நடை கணக்கெடுப்பு தாமதமாக நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா முன்முயற்சியால் 2017-ல் குறித்த காலத்தில் இக்கணக்கெடுப்பை நடத்த இயலவில்லை.


# தேசியச் செய்திகள்

## FAO உடன் அரசு இணைந்து விவசாயத் திட்ட துவக்கம்

- மத்திய அரசின் வேளாண் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகங்களுடன் ஐக்கிய நாடுகள் சபை உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது (UN body Food and Agriculture Organization- FAO) இணைந்து விவசாயத் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இது மத்தியப் பிரதேசம், மிசோரம், ஒடிசா, ராஜஸ்தான் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய 5 மாநிலங்களில் செயல்படுத்தப்படும்.
- பல்லுயிர்த்தன்மை மற்றும் வன நிலப்பரப்புகளை பாதுகாப்பதன் மூலம் வேளாண் துறையில் மாற்றுருவாக்கத்தை கொண்டு வருவதற்கு இது முற்படுகிறது.
- உலகளாவிய சுற்றுச்சூழல் வசதியிலிருந்து (GEF – Global Environment Facility) 33.5 மில்லியன் டாலர் மானியத்தால் இந்த திட்டம் நிதியளிக்கப்படுகிறது.

## இஸ்ரோ உளவு வழக்கு - D.K. ஜெயின் குழு

- கேரளா போலீஸாரால் உளவு பார்த்த வழக்கில் கைது செய்யப்பட்டு 24 ஆண்டுகளுக்கு பிறகு முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி S. நம்பி நாராயணனுக்கு உச்ச நீதிமன்றம் 50 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட்டுள்ளது.




- மேலும் நாராயணனை கைது செய்ததில் கேரள காவல்துறை அதிகாரிகளின் பணிநோக்கத்தினை விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி D.K ஜெயின் தலைமையிலான ஒரு குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது.
- இந்த குழுவானது மத்திய அரசு மற்றும் கேரள அரசு ஆகிய ஒவ்வொருவராலும் நியமிக்கப்பட்ட தலா அதிகாரி ஒருவரையும் கொண்டிருக்கும்.

- இவர் இஸ்ரோவின் வைகிங்/விகாஸ் எஞ்சின் தொழில்நுட்பம், கிரையோஜெனிக் எஞ்சின் தொழில்நுட்பம் மற்றும் PSLV விண்கல தரவு/வரைபடங்கள் மற்றும் ஆவணங்களை பாகிஸ்தானுக்கு வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

## இடமாற்ற சாகுபடிக்கான தெளிவான கொள்கை

- நிதி ஆயோக் ஆனது தனது சமீபத்திய அறிக்கையில் வேளாண் அமைச்சகமானது வெவ்வேறு அமைச்சகங்களுக்கிடையே மத்திய அமைச்சரவையின் ஒத்துழைப்பை உறுதி செய்வதற்காக இடமாற்றச் சாகுபடி திட்டத்திற்கென பணியை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது.
- இந்த அறிக்கையானது "இடமாற்று சாகுபடிக்கானத் திட்டம் : ஒரு நிலைமாற்று அணுகுமுறையை நோக்கி" (Mission on Shifting Cultivation: Towards a Transformational Approach") எனப் பெயரிடப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்திய-வங்க தேச நட்புறவு குழாய் திட்டம்

- இந்தியா மற்றும் வங்க தேச பிரதமர்கள் இருவரும் இணைந்து இந்திய-வங்கதேச நட்புறவு குழாய் திட்டத்தின் கட்டுமானத்தை காணொளிக் காட்சி மூலம் திறந்து வைத்தனர்.
- இந்தியாவின் மேற்கு வங்கத்தின் சிலிகுரி மற்றும் வங்க தேசத்தின் டினாஜ்பூர் மாவட்டத்தின் பர்பத்திப்பூர் ஆகியவற்றை இந்த 130 கிலோமீட்டர் குழாயானது இணைக்கும்.
- இது இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள நுமாலிகாரிலிருந்து பர்பத்திப்பூர் கிடங்கிற்கு சுத்திகரிக்கப்பட்ட டீசலை குழாய் வழியாக வழங்குவதற்காக அமைக்கப்பட்ட முதல் இவ்வகையான குழாய் ஆகும்.

## முக்கிய துறைமுக அணுகலுக்கான ஒப்புதல்

- வங்காள தேச அமைச்சரவையானது அந்நாட்டின் சிட்டகாங் மற்றும் மோங்லா துறைமுகங்களின் வழியாக இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களுக்கு சரக்குகளை அந்நாட்டின் உள்ளேயும் வெளியேவும் எடுத்து செல்வதற்கான வரைவு ஒப்பந்தத்திற்கு அனுமதி அளித்துள்ளது.
- வங்காளதேசப் பிராந்தியங்களில் சரக்குப் போக்குவரத்திற்கு அந்நாட்டு வாகனங்கள் மட்டுமே பயன்படுத்தப்படும்.
- இந்தியப் பொருட்கள் கீழ்க்காணும் நான்கு பகுதிகள் வழியாக நுழைய முடியும்.
    - ஹவுரா (வங்காள தேசம்) மற்றும் அகர்தலா (திரிபுரா, இந்தியா)

  - தமபில் (சில்ஹெட், வங்காள தேசம்) மற்றும் டௌகி (மேகாலயா)
  - ஷியோலா (சில்ஹெட்) மற்றும் சுடர்கண்டி (அசாம்)
  - பிபீர்பஜார் (குமிலா) மற்றும் ஸ்ரீமந்தபூர் (திரிபுரா)
- இதன்கீழ், சுங்க வரி , வர்த்தகம் மீதான பொது ஒப்பந்தம் மற்றும் வங்காள தேசக் கட்டுப்பாடுகளை இந்தியா பின்பற்ற வேண்டும்.
- இந்த ஒப்பந்தமானது ஐந்து வருடங்களுக்கு அமலில் இருக்கும். ஆனால் இது மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு தானாக நீட்டிக்க முடியும்.

## UNWTO-இன் 7வது உலகளாவிய நகர்ப்புற சுற்றுலா உச்சி மாநாடு

- தென் கொரியாவின் தலைநகரான சியோலில், செப்டம்பர் 16 முதல் 19 வரை UNWTO-இன் (United Nations World Tourism Organization) 7வது உலகளாவிய நகர்ப்புற சுற்றுலா உச்சி மாநாடு நடத்தப் பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துருவானது "2030 நகர்ப்புற சுற்றுலாவுக்கான பார்வை" (A 2030 Vision for Urban Tourism) என்பதாகும்.
- இந்த உச்சி மாநாடானது
  - உலக சுற்றுலா அமைப்பு (UNWTO),
  - சியோல் பெருநகர அரசாங்கம்

  ஆகிய அமைப்புகளால் ஒழுங்கு செய்யப்பட்டு தென்கொரியாவின் கலாச்சார, விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சகம், கொரியா சுற்றுலா அமைப்பு மற்றும் சியோல் சுற்றுலா அமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.
- UNWTO ஆனது ஸ்பெயினின் மாட்ரிட்டில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் செயலாண்மை நிறுவனம் ஆகும். இது பொறுப்பான, நிலையான மற்றும் உலகளாவிய அளவில் அணுகக்கூடிய சுற்றுலாத் தன்மையை மேம்படுத்துதலை பணியாகக் கொண்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இ-சஹரஜ் தளம்

- தனி நபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சில முக்கிய துறைகளில் தொழில் துவங்குவதற்கு பாதுகாப்பு அனுமதி பெறுவதை எளிதாக்குவதற்காக மத்திய உள்துறை அமைச்சகமானது (MHA – Ministry of Home Affairs) இ-சஹஜ் என்ற தளத்தைத் தொடங்கியுள்ளது.
- சில முக்கியத் துறைகளில் பாதுகாப்பு ஒப்புதல் வழங்குவதற்கு முன் உரிமம், இசைவாணைச் சீட்டு, அனுமதி, ஒப்பந்தம் ஆகியவற்றை அளிப்பதற்கான முதன்மை ஆணையமாக MHA உள்ளது.
- இந்த ஆன்லைன் தளமானது பாதுகாப்பு ஒப்புதல் செயல்முறைகளை நிலைப்படுத்தப்பட்டதாகவும், வேகமாகவும், வெளிப்படையாகவும் மற்றும் கண்காணிப்பை எளிதாகவும் மாற்றுகிறது.

## ஹைட்ரஜனில் இயங்கும் உலகின் முதல் இரயில்

- உலகின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் பயணிகள் இரயிலை ஜெர்மனி வெளியிட்டுள்ளது. 'ஐலிண்ட்' (iLint) என்றழைக்கப்படும் இந்த இரயிலானது பூஜ்ய உமிழ்வுடையதால் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவையாக உள்ளது.
- இந்த இரயில் தொழில் நுட்பமானது மின்மயமாக்கப்பட்ட இரயில் பாதைகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், சத்தமில்லாததாகவும் டீசலுக்கு மாற்றாகவும் உள்ளது.
- இந்த ஹைட்ரஜன் இரயிலானது பிரான்ஸின் TGV தயாரிப்பாளரான அல்ஸ்டாம் என்ற நிறுவனமத்தால் தயாரிக்கப்படுகிறது.
- ஹைட்ரஜன், ஆக்ஸிஜனை இணைப்பதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் எரிபொருள் செல்கள் இந்த ஹைட்ரஜன் இரயில்களில் பொருத்தப்பட்டுள்ளன.

# சுற்றுச்சுழல் செய்திகள்

## இந்தியாவின் குளிர்ச்சி நடவடிக்கைத் திட்டம் (ICAP – India Cooling Action Plan)

- உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகமானது (Ministry of Environment, Forests and Climate Change - MoEFCC) இந்தியாவின் குளிர்ச்சி நடவடிக்கை திட்டத்திற்கான வரைவை வெளியிட்டுள்ளது.
- இது இந்தியாவை இவ்வகையான ஆவணங்களை உருவாக்குதலில் முதல் நாடாக்கியுள்ளது. MoEFCC-ன் ஓசோன் பிரிவால் இந்த வரைவு உருவாக்கப்பட்டுள்ளது.
- இது ஓசோன் படலத்தை அழிக்கக்கூடிய பொருட்களிலிருந்து ஓசோனை பாதுகாக்கும் தேவையை மனதில் கொண்டு நிலையான குளிர்ச்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## புதிய இணையப் பல்கலைக்கழகம்

- இணைய அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட புதிய இணையப் பல்கலைக்கழகத்தை மஹாராஷ்டிரா அரசு நிறுவ இருக்கின்றது.
- இந்த இணையப் பல்கலைக்கழகமானது இணையதள வல்லுனர்களுக்காக மைக்ரோசாப்ட் நிறுவனம் சான்றளிக்கப்பட்ட நிபுணத்துவ படிப்புகளை உருவாக்கி வழங்கும்.
- இது தரவுப் பகுப்பாய்வு, கிளவுட் கம்ப்யூட்டிங் அல்லது மேகக் கணினி,

தொடர் சங்கிலி, செயற்கை நுண்ணறிவு, இணைய தடவியல் மற்றும் இணைய விசாரணை ஆகிய படிப்புகளை வழங்கும்.

# இதரச் செய்திகள்

## டென்ஜிங் நார்கே விருது

- INSV தாரினியின் அனைத்து மகளிர் குழுவானது புகழ்மிக்க டென்ஜிங் நார்கே தேசிய வீரச்செயல் விருதைப் பெற்றுள்ளது.



- INSV Tarini crew bestowed with Tenzing Norgay Award:
- The award is the highest national recognition for outstanding achievements in the field of adventure on land, sea and air.
- The women Navy officers had spent as many as 194 days at sea as part of a mission under the Navika Sagar Parikrama project that began in September last year.

- இது உலகம் முழுவதும் எட்டுமாத கால அளவிற்கு மேற்கொண்ட கடல் பயணத்திற்காகவும் சாதகமற்ற நீரில் நீடித்த அவர்களின் திறனுக்காகவும் இக்குழுவிற்கு அவ்விருது வழங்கப்பட்டது.
- இந்த விருதானது நிலம், கடல் மற்றும் காற்று ஆகியவற்றில் வீரச்செயல் புரிந்தவர்களுக்காக வழங்கப்படும் உயரிய விருதாகும்.
- மேலும் 72 வது சுதந்திரத் தினத்தில் இக்குழுவினர் நாவ் சேனா விருதையும் பெற்றனர்.

- - - - - - - - - - - - - - -